சார்பு நீதிமன்றம், அவிநாசி

M.C.O.P.No.80/2017 நாள்:19.11.2019

ம.சா.1, கமலம், குறுக்கு விசாரணை 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்:

வழக்கு சம்பவம் நடந்து 3 ஆண்டுகள் ஆகிறது. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் என்னுடைய வயது 55 என குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய வயது என்ன குறிப்பிட்டுள்ளேன் என்றால் 55 என்று குறிப்பிட்டுள்ளேன். நீதிமன்றத்தின் முன்பாக தவறான தகவலை அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் 55 வயது என்று குறிப்பிட்டுவிட்டு தற்போது 64 வயது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பொள்ளாச்சியில் வசித்து வருகிறேன். அவிநாசியில் வசிக்கவில்லை என்றால் சரிதான். அவிநாசியில் குடியிருப்பதற்கான எந்தவித ஆவணங்களையும்நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய வழக்கை தாக்கல் செய்ய எந்த முகாந்திரமும் இல்லாததால் இந்த வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. என்னுடைய மனுவில் விவசாய கூலி என குறிப்பிட்டுள்ளேன் என்றும் அதற்கான ஆதாரங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 11.03.2016 அன்று சுமார் எத்தனை மணிக்கு விபத்து நடந்தது என்றால் காலை 5.30 மணிக்கு நடந்தது. மேற்கு நோக்கி நடந்து சென்றதாக என்னுடைய மனுவில் சொல்லியுள்ளேன் என்றும் அப்போது இருட்டாக இருந்தது என்றால் சரிதான். நான் குப்பையை கொட்டிவிட்டு நான் மட்டும்தான் சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். நான் சென்ற பகுதியில் இடது புறம் ஆழமான பகுதிகள் உள்ளது என்றால் சரிதான். இந்த வாகன விபத்தில் என்மீது வாகனம் மோதவில்லை என்றால் வண்டி வருகிறது என்று நான் விலகியபோது என்மீது வண்டி மோதியது. வண்டி எனக்கு எந்த திசையில் வந்தது என்றால் வண்டி எனக்கு நேர் எதிர் திசையில் வந்தது. நேர் எதிர் திசையில் வந்த வண்டிதான் என்மீது மோதியது. நாகராஜ் என்பவர் என்னுடைய மகன். அவருக்கு இந்த விபத்து சம்பந்தமாக எவ்வளவு நேரம் கழித்து தெரியும் என்றால் சத்தம் கேட்டு அவர் வெளியே வந்து பார்த்து நான் அடிபட்டு இருப்பதை பார்த்தவுடன் வண்டியை நிறுத்திவிட்டார்கள். இந்த விபத்து எனக்கு பின்பக்கமாக வந்த வாகனம் மோதிவிட்டது என்றால் தவறு. என்னுடைய மனுவிலும் நிரந்தர ஊனம் அடைந்து விட்டதாக சொல்லியுள்ளேன் என்றும் எனக்கு எந்தவிதமான நிரந்தர ஊனம்

ஏற்பட்டுள்ளது என்றால் எனக்கு தலையில் அடிபட்டதால் வேளைக்கு செல்லமுடியாது என சொல்லிவிட்டார்கள். நிரந்தர ஊனம் என்பதற்கான அரசு மருத்துவரிடம் இருந்து எதாவது சான்றிதழ் வாங்கி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இது என்ன வாகனம் என்பதை பற்றி இரண்டு மாதம் கழித்துதான் எனக்கு தெரியும்.நான் நீதிமன்றத்தின் முன்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டாம் எதிர்மனுதாரரின் வாகனம் எதுவும் மோதவில்லை என்றும் வாகனத்தின் சத்தத்தை கேட்டு இடது புறமாக இருந்த குழியில் நான் விழுந்தததின் காரணமாக ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி கெட்டலாபம் அடைய வேண்டும் என்பதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. மனுவில் கோரியுள்ள தொகை முழுவதும் மிக அதிகமான தொகை என்றும் அதற்கான முகாந்திரம் ஏதும் எனக்கு இல்லை என்றால் சரியல்ல. எனவே முகாந்திரம் அற்ற நிலையிலும் இநத் நீதிமன்றத்தில் இம்மனுவை தாக்கல் செய்யக்கூடிய எல்லை வரையறை இல்லாத நிலையிலும் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யாத நிலையிலும் நான் இழப்பீடு பெற தகுதியற்றவர் என்பதால் நான் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்.கமலம்

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the pleader and admitted by the witness to be correct.*

-Sd-S.Prabha Chandran-
Sub Judge,
*Avinashi.*